உ
அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

பதிவு இல. J/3/84/23-09-1988

## 22ஆவது ஆண்டு நிறைவு
## பரிசளிப்பு விழா அறிக்கை

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை

## இருபத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழா

# பரிசளிப்பு விழா அறிக்கை

## 22-02-2004 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினரால் 03-02-1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்றது எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லம். இவ்வில்லத்தின் 22ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா அறிக்கையைச் சமர்ப்பிக்க முன் வந்துள்ளோம். இதனை யிட்டு எங்கள் நிர்வாகசபையும் துர்க்காபுரம் மகளிர் இல்லமும் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

இன்று நடைபெறுகின்ற பெருவிழாவுக்கு தலைமை தாங்குகின்ற எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அம்மா அவர்களே, பெரு வணக்கத்துக்குரிய சிவாச்சாரியப் பெருமக்களே, வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன குருமகா சந்நிதான சுவாமி அவர்களே, ஆசியுரை வழங்க வந்துள்ள குருக்கள் ஐயா அவர்களே, மற்றும் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அம்மையார் அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள யாழ். மாவட்ட செயலக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர் உயர்திரு. து. வைத்திலிங்கம் ஐயா அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள யாழ். மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி புலவர் மு. திருநாவுக்கரசு ஐயா அவர்களே, எங்கள் மீது மிகுந்த அன்பு உள்ளம் கொண்ட பெருமக்களே, அறிஞர்களே, குழந்தைகளே உங்கள் யாவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழாவின் மகிழ்ச்சியில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இவ்விழாவுக்கு தலைமை தாங்குகின்ற எங்கள் பெரு வணக்கத்துக்கும் பெரும் மதிப்புக்குமுரிய கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் அரவணைப்பில் வாழ்ந்து வருவதால் நாம் எல்லாம் பெருமிதம் அடைகின்றோம். இதனால் எங்களின் இளமை வாழ்வு கல்வியினாலோ, உடைகளினாலோ மற்றும் பல்வேறு வசதிகளினாலோ எவ்வித குறைகளும் இல்லாமல் இங்கு வாழ்ந்து வருகிறோம். எங்கள் அம்மையார் அவர்கள் 79ஆவது வயதை பூர்த்தி செய்து எமக்கெல்லாம் வாழ்வு தரும் அன்னையாக விளங்குகின்றார். அவர்களை முதலிலே வாழ்த்தி வணங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய சிறப்பான பணிகளுக்கு எல்லாம் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் அன்போடு என்றென்றும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள் இங்கு வருகை தந்திருக்கும் அந்தணப் பெருமக்களும், நல்லை ஆதீன குருமகா சந்நிதான சுவாமி அவர்களும், இராமநாதன் கல்லூரியின் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அம்மா அவர்களும் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எல்லாம் இங்கு வருகை தந்து எங்களை ஆசீர்வதிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேலும், எங்கள் விழாவுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள பெரியார் உயர்திரு. து. வைத்திலிங்கம் ஐயா அவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக பணிபுரிந்தவர். தற்பொழுது யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கி வரும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிப்பணிப்பாளராக பணியாற்றுகின்றார். அவர்கள் கோயிலிலும், மகளிர் இல்லத்திலும் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு ஆசீர்வதித்து வருபவர். இந்துசமய கலாச்சார அமைச்சர் உயர்திரு. தி. மகேஸ்வரன் அவர்களின் அமைச்சின் கீழ் பணிபுரிந்து வரும் ஐயா அவர்கள் இந்திய நாட்டு ஆத்மீக பெரியார்களையும், பேரறிஞர்களையும், மற்றும் மேலைத்தேய நாடுகளில் இருந்து வரும் சமூக நிறுவன தொண்டர்களையும் எங்கள் ஆலயத்திற்கு அழைத்து வந்து அம்பாளை வழிபாடு செய்ய வைத்தும் எங்கள் பணிகளை அவர்களுக்கு அறிமுகம் செய்தும் வைப்பவர் ஐயா அவர்களே என்றால் அதில் மிகை ஒன்றுமில்லை. சிறந்த எழுத்தாளரும் செயல் ஆற்றலும் கொண்ட திரு. வைத்திலிங்கம் ஐயா வருகை தருவதும் அவர்களின் அருமைப் பாரியார் திருமதி ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் அம்மையார் அவர்கள் எங்களுக்கு பரிசில் வழங்க வந்திருப்பதும் பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

எங்கள் இல்லப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்ற இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் நாங்கள் போற்றாமல் இருக்க முடியாது. மேலும் எமது பிறந்த நற்றவ மண்ணை பெருமைப்படுத்திக் கொண்டும், புனிதப்படுத்திக் கொணடும் இருக்கும் பெருமக்கள் பலர் இங்கு வருகை தந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது வணக்கமும் வரவேற்பும் உரித்தாகுக.

இன்று எங்கள் இல்லத்தில் 65 பெண்பிள்ளைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் இல்லப்பணிகளுக்கென ஆறு பேரும், விவாகமாகாத பெண்களும் ஆக பத்துபேர் உள்ளனர். துறவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி அம்மையார் அவர்களும், மாதாஜி அம்மையார் அவர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும் சிற்றூழியர்கள், காவலாளிகள், கோசாலைப் பராமரிப்பாளர்கள் என மொத்தமாக பத்துபேர் பணிபுரிகின்றனர். இல்லப் பிள்ளைகளில் முப்பது பேர் தாய், தந்தையர் இருவரையும் இழந்தவர்கள் ஆவார். ஏனையவர்களில் தாய், தந்தையர் இருவரில் ஒருவர் மாத்திரம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் புதிதாக 6 வயதிற்கும் 10 வயதிற்கும் இடைப்பட்ட 16 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பதிவு:

துர்க்காபுரம் மகளிர் இல்லம் அரசாங்க நன்னடத்தைப் பாதுகாவலர் சிறுவர் திணைக்கள சட்ட விதிகளுக்கு அமைய 23-09-1988இல் பதிவு செய்யப்பட்டது. திணைக்களத்தின் பதிவு இலக்கம் J/3/84 ஆகும். இதன் பிரகாரம் துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற இல்லம் என்பதை குறிப்பிடுகின்றோம்.

கல்வி வளர்ச்சி:

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தற்போது 65 பெண்பிள்ளைகள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் ஆண்டு 6 முதல் ஆண்டு 13 வரை யாழ். இராமநாதன் கல்லூரியிலும் க. பொ. த. உயர்தரத்தில் சித்தி பெற்று யாழ் நுண்கலைப்பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களுக்குரிய சிற்றூர்தி வாகனத்தில் சென்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் முப்பது பேர் தாய் தந்தை இருவரையும் இழந்தவர்கள். ஏனையோர் தாய், தந்தையர் இருவரில் ஒருவரை இழந்தவர்களும் வலது குறைந்த வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களின் பிள்ளைகளும், இடப் பெயர்ச்சிக்குட்பட்டு மீளக்குடியமர முடியாது வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எமது இல்லப் பிள்ளைகள் கல்லூரி மாணவர் தலைவர்களாகவும், இசைப்பிரிவில் மட்டுமல்ல பேச்சு நடனம், நாடகம், விளையாட்டுத் துறைகளிலும் முன்னணி வகிக்கின்றார்கள். இல்லச் சிறுமி ஒருவர் வளர்ந்து இசைத்துறைப்பட்டதாரியானது மட்டுமன்றி யாழ். இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இசைத்துறையில் விரிவுரை ஆற்றிவருவதும் இல்லத்திற்குப் பெருமையைத் தேடித்தருவதோடு தனக்கும் பெருமையைத் தேடிக் கொண்டுள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் இடம் பெற்ற இராமநாதன் நினைவுப் பேச்சுப் போட்டியில் அதிமேற்பிரிவில் செல்வி இ. கோகிலா 1ஆம் இடம் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். செல்வி ம. சுமித்திரா 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். கீழ்ப்பிரிவு பேச்சுப்போட்டியில் செல்வி வி. யலஜா 2ஆம் இடம் பெற்றுள்ளார். இவர்களுக்குப் பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. இதே நினைவுதினக் கட்டுரைப் போட்டியில் செல்வி அ. துஸ்யந்தி 1ஆம் இடம், செல்வி வி. யலஜா 2ஆம் இடம், செல்வி சி. தர்சினி 3ஆம் இடம் பெற்றுள்ளார்கள். சிறுவர் தினப் பேச்சுப் போட்டியில் செல்வி நா. சர்வலோஜினி 2ஆம் இடம் கட்டுரைப் போட்டியில் செல்வி சி. தர்சினி 2ஆம் இடம் பெற்றுள்ளனர். பண்ணிசைப் போட்டியில் செல்வி துஸ்யந்தினி வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார். ஆங்கிலப் பாடல் குழு நிலையில் பலர் பங்குபற்றி 1ஆம், 2ஆம் இடம் பெற்றனர்.

பூ மாலை கட்டல், கோலம் போடுதல்:

இல்லப் பிள்ளைகள் நவராத்திரி, தொண்டுபடு செயன் முறைப் போட்டிகளில் ஆண்டாள் மாலை, மொட்டு மாலை, கழுத்து மாலைப் போட்டிகளில் 7 பேர் 1ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமும், 4 பேர் 2ஆம் இடமும், 7 பேர் மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர். புள்ளிக் கோலம், தானியக் கோலம், தேங்காய்ப்பூக் கோலம், பூக்கோலம் என்பவற்றில் 3 பேர் 1ஆம் இடமும், 2 பேர் 2ஆம் இடமும் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு (A/L) இருவர் தோற்றி இருவரும் சித்தியடைந்துள்ளனர். செல்வி பா. சுபாஜினி 2B, C, செல்வி நா. சத்தியா C, 2S பெற்றுள்ளனர். க. பொ. த. சாதாரணப்பரீட்சைக்கு 3 பேர் (O/L) தோற்றி சித்தியடைந்துள்ளனர்.

**பிரத்தியேக பாடபோதனை:**

பிரத்தியேக பாடபோதனையாக கணிதம், ஆங்கிலம், சங்கீதம், கணனிக்கல்வி துறைகளுக்கு இல்லத்தில் வந்து கற்பிக்க ஆசிரியர்கள் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. சி. அருளானந்தசிவம் அவர்களும் செல்வி ஜானகி கமலநாதன் அவர்களும் ஆங்கில பாடத்துக்கும், செல்வி அருந்ததி ராமச்சந்திரன் கணித பாடமும், கற்பித்து வருகின்றனர். இவற்றை விட துர்க்காதேவி தேவஸ்தான நூலகத்திலும் பயிற்சி பெற்று வருவதோடு தேவஸ்தானத்தினால் நடாத்தப்பட்டுவரும் அறநெறிப்பாடசாலையில் இல்லப்பிள்ளைகள் செல்வி ரெ. கிருஸ்ணவேணியும், செல்வி இ. கோகிலாவும் ஆசிரியர்களாக கடமை புரிகின்றனர்.

மாணவர் மன்றம்:

மாதந்தோறும் மாணவர்மன்றம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றது. தலைவர், காரியதரிசி, பொருளாளர், பத்திரிகை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இல்லப்பிள்ளைகளின் ஆளுமை, நிர்வாகம், வளர்க்ப்படுகிறது. கல்வி வளர்ச்சிக்கான பேச்சு, கட்டுரை, கவிதை, பட்டிமன்றம், ஆடல், பாடல், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் பொது அறிவை மேம்படுத்துவதற்கான விஞ்ஞான, கணித மற்றும் பொது அறிவுக்குரிய வினா விடைகளும் இடம் பெறுகின்றன. சுடர் ஒளி சஞ்சிகையும் இவர்களால் மாணவரது ஆக்கங்களுடன் வெளியிடப்படுகின்றது. பொருளாளரினால் சேகரிக்கப்படும் நிதி மூலம் பரிசளிப்புகளும் இல்லத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு பிரியாவிடை வைபவங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

**பொதுச் சிறப்புக்கள்:**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மண்டபங்களில் நடைபெறும் விழாக்கள், திருமணங்கள், போன்ற வைபவங்களின் விருந்துபசாரங்களில் உணவு பரிமாறும் ஒழுங்கு முறைகளைப் பலரும் மெச்சுகின்றனர். பிள்ளைகளின் நலன் கருதியும் ஊக்குவிப்பிற்காகவும் துணிவகைகளும் பணமும் பரிசாக வழங்குகின்றனர். இல்லப்பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதியும் அவர்களின் பணியின் பாராட்டுதலாகவும் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எல்லாப்பிள்ளைகளுக்கும் ரூபா5000/- வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தானத்திலிருந்து வைப்பிலிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு நலன் விரும்பிகள் வளர்ந்த பிள்ளைகளுக்கு தங்க நகைகள் அன்பளிப்புச் செய்துள்ளனர். அதுமட்டுமல்ல இவர்களின் பணியைப் பாராட்டிய பெரியார் ஒருவர் ரூபா2500/- வீதம் பத்து பிள்ளைகளுக்கு பணம் வழங்கிக் கௌரவித்துள்ளார். இவை எல்லாம் இல்லப்பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும். துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அலுவலகத்தில் பணிபுரியும் இல்லத்தின் சிரேஷ்ட உறுப்பினரான செல்வி த. மஞ்சுளா அவர்கள் தேவஸ்தானத்திலும் மற்றும் இல்லம், பொதுப்பணிகளிலும் இவர் காட்டிவரும் தொண்டின் சிறப்பைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

**நிதியுதவி:**

எங்கள் மகளிர் இல்லப்பிள்ளைகளின் கல்விக்கும் இதர உணவு, உடை, வைத்தியம் போன்றவற்றிக்கான செலவுக்கும் அன்பர்கள் நிதியுதவி செய்து வருகின்றனர். இந்நிதியை உள்நாட்டில் வாழும் அன்பர்களும், பொது நிறுவனங்களும் எமது இல்ல வளர்ச்சிக்கு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகின்றனர். நிறுவனங்களின் அன்பளிப்புக்கள் வருடாந்த வரவு செலவு கணக்கு அறிக்கையில் இடம் பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம். ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவங்கள், பிறந்த தின வைபவங்கள், பெற்றோரின் சிரார்த்த தின வைபவங்கள் என்பனவற்றில் தாங்களும் வந்து கலந்து கொண்டு இல்லப்பிள்ளைகளுக்கும் உணவு வழங்கி சிறப்பிக்கும் ஆர்வலர்கள் பலர் இருக்கிறார்கள். இதனால் நாங்கள் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருக்கின்றோம்.

**தங்க ஆபரண அன்பளிப்பு:**

கடந்த ஆண்டு இலண்டன் மாநகரில் வசித்து வரும் திரு. வ. இ. இராமநாதன் அவர்கள் சைவ முன்னேற்றச்சங்கத்தின் சார்பில் எமது இல்லப்பிள்ளைகளுக்கு பெறுமதி மிக்க தங்க ஆபரணங்களை வழங்கி கௌரவித்தார்கள். இதே போன்று இவ்வாண்டும் எங்கள் இல்லப்பிள்ளைகளுக்கு தங்கச்சங்கிலிகளை அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திருமதி சேதா. சண்முகசோதி அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். இவர்கள் எங்கள் தேவஸ்தானத்தோடு நீண்டகால தொடர்புடையவர்கள் இவர்கள் வழங்கிய அன்பளிப்பை வறுமைக்கோட்டின் கீழ் உள்ள ஐந்து இல்லப்பிள்ளைகளுக்கு அணிவதற்கு வழங்கியுள்ளோம். இல்லத்தில் வளர்கின்ற பிள்ளைகளாகிய அவர்கள் வெறும் அநாதைகள் என்ற பேச்சுக்கு உரியவர்கள் அல்லாமல் சகல வளமும் கொண்டவர்களாக விளங்க வைப்பது அனைவரது கடமை ஆகும். எனவே திருமதி சேதா. சண்முகசோதி அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றியுடையோம்.

**ஆதரவு வழங்கும் நிறுவனங்களும், அன்பர்களும்:**

1. அபயகரம் - அவுஸ்ரேலியா
2. ஈழத்தமிழர்கழகம் - அவுஸ்ரேலியா
3. சிவயோகம் - இலண்டன்
4. தமிழர் நம்பிக்கை நிதியம் - இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் - இலண்டன்
6. சைவ முன்னேற்றச்சங்கம் - இலண்டன்
7. ஸ்கொட் நிறுவனம் - இலண்டன்
8. G. T. Z. நிறுவனம்
9. திருமதி முருகேசபிள்ளை குடும்பம் - இலண்டன்
10. Dr. வி. கருணாகரன் குடும்பம் - இலண்டன்
11. செல்வி சுலோஜனா பாஸ்கரன் - அவுஸ்ரேலியா
12. திரு. க. சிவராசா குடும்பம் - கொலன்ட்
13. திருமதி ஏழிசைநாயகி - பிரான்ஸ்
14. திரு. க. லிங்கேஸ்வரன் குடும்பம் - சுவிஸ்லாந்து
15. திரு. பொ. அ. பாலசுப்பிரமணியம் - பம்பலப்பிட்டி
16. திரு. ஜெயபாலன் லிங்கேஸ்வரன் - இலண்டன்
17. திருமதி இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம் நினைவு நிதியம் - அமெரிக்கா
18. திரு. பிரதீபன் ஜெகநாதன் அறக்கட்டளை நிதியம் - நியூசிலாந்து

மேற்குறிப்பிட்டநிறுவனங்களும், அன்பர்களும் ஒரு கணிசமான தொகையை வழங்கி இல்ல வளர்ச்சிக்கு உதவி புரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கணனி பயிற்சி:**

இல்லப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சமாக கணனிக்கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரு. சி. தர்மேந்திரா அவர்களும், செல்வி சந்திரிக்கா சண்முகதேவன் அவர்களும் பிள்ளைகளுக்கு கணனிப்பயிற்சி அளித்து வருகின்றனர். 7 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இதனால் அலுவல தொடர்புகளும் கணக்கு நடைமுறைகளும் வசதியாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்:**

இவ்வில்லத்தில் அன்னையர்கள் இவ்வாண்டு 10 பேர் இடம்பெற்றுள்ளார்கள். இவர்கள் அனைவரும் மற்றையவர்களுடைய உதவியை நாடாது மகளிர் இல்லத்தையே நம்பி வாழ்பவர்கள். மேலும் இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை தாமே ஆற்றும் இயல்புடையவர்களாக உள்ளனர். இதனால் ஆலயப்பணி மகளிர் இல்லப்பணி சரியைத் தொண்டுகள் என்பனவற்றை நல்ல முறையில் ஆற்றி வருகின்றனர். மகளிர் இல்ல நிதியில் இருந்து இவர்களுக்குரிய உணவு, உடை, வைத்தியம் போன்ற செலவுகளும் கைச்செலவுக்குரிய பணமும் வழங்கி வருகின்றோம். இங்கு வாழும் அன்னையர்கள் அனைவரும் மிகுந்த மனநிறைவோடும் அமைதியோடும் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்:**

நல்லூர் கந்தப்பெருமானின் திருவருளினாலும் துர்க்கை அம்மனின் திருவருளினாலும் மணிமண்டப பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆண்டு தோறும் நூற்றுக்கு மேற்பட்ட திருமண வைபவங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. மேலும் இங்கு பல மிருதங்க அரங்கேற்றங்களும், இசைவிழாக்களும், நூல் வெளியீட்டு விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. நல்லூர் கந்தசாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு 25 நாட்களும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகின்றது. மேலும் விஷேச விழாக்காலங்களில் தண்ணீர் பந்தல் வைத்து தாகசாந்தியும் செய்யப்பட்டு வருகின்றது. அன்னதான நிகழ்வுகளுக்கு எல்லாம் யாழ். குடாநாட்டு வர்த்தக பெருமக்கள் பெரும் ஆதரவு வழங்கிவருவதை மனதார பாராட்டி நன்றி கூறி அமைகின்றோம். மேலும் இங்கு நடைபெறும் சமயகுரவர்கள் குருபூசை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை, கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் குருபூசை என்பன இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. கந்தசட்டி 6 தினங்களும் கந்தபுராண விரிவுரை நடைபெறுகின்றது. பூர்த்திதினத்தன்று அடியார்களுக்கு பாரணை போசனம் வழங்கி வருகின்றோம்.

**சரியைத் தொண்டுகள்:**

எங்கள் இல்லப்பிள்ளைகளும் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினரும் கூட்டாக இணைந்து திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்களில் சரியைத் தொண்டாற்றி வருகின்றனர். தினமும் ஆறு பிள்ளைகள் சுழற்சி முறையில் கோயில் நந்தவனத்தில் இருந்து பூக்களைக் கொய்து பூமாலை கட்டி மூலஸ்தான அம்பாளுக்கும் பரிவாரங்களில் அமைந்த உற்சவ மூர்த்தி விக்கிரகங்களுக்கும் பூசை அலங்காரத்திற்கு உதவி வருகின்றன. இவர்கள் காலைக்கடன்களை முடித்து உட்கோவில் வீதிகளை கூட்டி, தண்ணீர் தெளித்து, சுத்தம் செய்து சரியைத் தொண்டை ஆற்றிவருகின்றன. அன்னசத்திர மண்டபத்தில் செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் அன்னதானத்திற்குரிய மரக்கறி வகைகளை வெட்டிச் செப்பனிட்டும் அடியார்களுக்கு அன்னதானம் பரிமாறியும் வருகின்றனர். தினமும் திருக்கோயில் வெளிவீதியை சுற்றி வழிபாடு செய்கின்றார்கள். மார்கழி மாதத்தில் மார்கழிப்பிள்ளையார் பிடித்து வழிபாடு செய்வதும் திருவெம்பாவை காலத்தில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை பாடி வழிபாடு செய்வதும் தைப்பொங்கல் தினத்தன்று சூரியனுக்கு சூரிய பொங்கல் செய்து வழிபாடும் நடைபெற்று வருகின்றது.

**காணி கொள்வனவு:**

நீண்ட காலமாக மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு விளையாட்டு இடம் பெற ஒரு மைதானம் இல்லாமல் இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கமாக துர்க்காதேவி தேவஸ்தான மேற்புற மேற்கு வீதியின் மேற்குப்பக்கமாகவுள்ள காணி 24 பரப்பு இவ்வாண்டு கொள்வனவு செய்யப்பட்டது. இதனால் கொட்டோலை ஒழுங்கையுடன் தேவஸ்தான வீதி இணைகின்றது. எனவே இவ்வாண்டு இல்லப்பிள்ளைகளுக்கு இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள செய்தியை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்:

இம்மகளிர் இல்லத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு விழாவிலே பலருக்கு நன்றி கூறவேண்டிய கடமை எமக்குண்டு.

❄ எங்கள் இல்லப்பணிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் தேவஸ்தான நிர்வாக சபையினர், துர்க்காதேவி பெண்கள்தொண்டர் சபையினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர்,

❄ கிராமசேவை உத்தியோகத்தர், யாழ்.அரசஅதிபர், வலி-வடக்குப்பிரதேச செயலர்.

❄ எமது பணியை நல்லபடி ஊக்குவித்து அன்பளிப்புக்களை நல்கிவரும் உள்ளூர், வெளியூர் அன்பர்கள்.

❄ மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு வைத்திய உதவி வழங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையினர், மற்றும் Dr. ம. மகேசன், Dr. க. ஈஸ்வரி ஆகியோர்.

❄ இல்லக்கடமைகளிலும் மற்றும் மகளிர் இல்லப்பிள்ளைகளின் கலைநிகழ்வுகளிலும் முன்னின்று பயிற்சி அளித்து உதவும் அருட்சகோதரி ஜதீஸ்வரி, திருமதி நந்தினி சிவராஜன், செல்வி வி. வடிவாம்பிகை ஆகியோர்.

❄ தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் மற்றும் பணியாளர்கள்.

❄ நீர் மின் இணைப்பு வேலைகளைச் செய்து உதவும் திரு. த. தயானந்தன், திரு. மா. சௌந்தரராஜன் அவர்கள்.

❄ நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபப் பணியாளர்கள் நால்வருக்கும் அத்துடன் இங்கு நடைபெறும் நிகழ்வுகள் அத்தனையிலும் பங்கு கொண்டு பணியாற்றும் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள்.

❄ நிர்வாகசபை கொழும்புப் பிரதிநிதி திரு. சி. புஸ்பநாதன் அவர்கள்

❄ கடிதத் தொடர்புகள், அச்சகப்பணிகள், அன்பளிப்புக்கள், வங்கி வைப்புக்கள் ஆகிய பணிகளை நல்லபடி ஆற்றும் அலுவலர் திரு. கா. சிவபாலன், திரு. வ. நடராசா, செல்வி ச. ரேவதி, திருமதி சி. தவனேஸ்வரி, செல்வி த. மஞ்சுளா செல்வி நா. சத்தியா, செல்வி பா. சுபாஜினி ஆகியோர்.

❄ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர் யாழ். சேவை வானொலி நிலையத்தினர்.

❄ காலமும் நேரமும் அறிந்து செய்திகளை வெளியிடும் உதயன், வலம்புரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு, தினக்குரல், தினகரன், வீரகேசரி, யாழ். தினக்குரல் ஆகிய பத்திரிகைத்துறையினர்.

❄ மகளிர் இல்லக் கணக்கு விபரங்களை நல்லபடி ஆற்றி உதவும் இலங்கை வங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம், யாழ்ப்பாணம், இலங்கை வங்கி பம்பலப்பிட்டி, யாழ்ப்பாண வர்த்தக வங்கி ஆகியன.

❄ மகளிர் இல்ல அச்சுப்பணிகளை நல்லபடி நிறைவேற்றித்தரும் திருமகள் அழுத்தகத்தினர்.

ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

என்பதை மனதில் இருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து ஆவன செய்வோமாக.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, **J. P.**
தலைவர்

செல்வி ம. சுமித்திரா
இல்ல மாணவி

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை.
22-02-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காபுரம் மகளிர் இல்லததின்

22ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில்

# பரிசில் பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| 1. செல்வி க. கரிசாலினி | ஆண்டு 1 |
| 2. செல்வி சி. கீர்த்தனா | ஆண்டு 2<br>மாலைகட்டல் 1ஆம் இடம்<br>மனனப்போட்டி (ஆத்திசூடி) 1ஆம் இடம். |
| 3. செல்வி க. கயலி | ஆண்டு 2<br>ஆத்திசூடி மனனம் 2ஆம் இடம்<br>மாலை கட்டல் 2ஆம் இடம் |
| 4. செல்வி இ. வளர்மதி | ஆண்டு 4<br>திருக்குறள் மனனம் 2ஆம் இடம் |
| 5. செல்வி வி. பிரசா | ஆண்டு 4<br>மாலைகட்டல் 3ஆம் இடம்,<br>நீளம் பாய்தல் 3ஆம் இடம்<br>சைவபரிபாலனசபைப் பரீட்சை "A" |
| 6. செல்வி வி. நவநீதா | ஆண்டு 4<br>திருக்குறள் மனனம் 3ஆம் இடம்<br>மாலைகட்டல் 3ஆம் இடம் |
| 7. செல்வி சி. சுவேந்திரா | ஆண்டு 4 |
| 8. செல்வி க. செல்வதி | ஆண்டு 5<br>மாலை கட்டல் 1ஆம் இடம் |
| 9. செல்வி தே. தேவரூபி | ஆண்டு 5<br>திருக்குறள் மனனம் 1ஆம் இடம் |
| 10. செல்வி ச. தனுஷியா | ஆண்டு 5 |
| 11. செல்வி க. கயித்தா | ஆண்டு 5 |
| 12. செல்வி ஜெ. தேவரூபி | ஆண்டு 6<br>திருக்குறள் மனனம் 1ஆம் இடம்<br>சகலகலாவல்லி மாலை மனனம் |
| 13. செல்வி இ. மதிவதனி | ஆண்டு 6<br>மாலை கட்டல் 2ஆம் இடம்,<br>சகலகலாவல்லி மாலை மனனம் 2ஆம் இடம்<br>கோலம் போடுதல் 2ஆம் இடம்<br>நீளம் பாய்தல் 2ஆம் இடம் |
| 14. செல்வி ஜெ. மனோறஞ்சினி | ஆண்டு 6<br>மாலை கட்டல் 1ஆம் இடம்<br>கோலம் போடுதல் 3ஆம் இடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 15. செல்வி ம. ஜீவநந்தினி | ஆண்டு 6<br>200M ஓட்டம் 3ஆம் இடம்<br>நீளம் பாய்தல் 3ஆம் இடம் |
| 16. செல்வி க. சபேசினி | ஆண்டு 6<br>200M ஓட்டம் 1ஆம் இடம் |
| 17. செல்வி த. யசிந்தா | ஆண்டு 6 |
| 18. செல்வி சி. சிவரூபி | ஆண்டு 6 |
| 19. செல்வி ஜெ. அகிலா | ஆண்டு 7<br>மாலை கட்டல் 1ஆம் இடம் |
| 20. செல்வி சி. யசோதினி | ஆண்டு 7<br>பண்ணிசை 2ஆம் இடம் |
| 21. செல்வி க. ஜெசனி | ஆண்டு 7<br>மாலை கட்டல் 2ஆம் இடம் |
| 22. செல்வி பா. விதுஷாயினி | ஆண்டு 7<br>மாலை கட்டல் 3ஆம் இடம் |
| 23. செல்வி க. கயானி | ஆண்டு 7 |
| 24. செல்வி யே.மேரி மெற்றில்டா (தீபா) | ஆண்டு 8<br>மாலை கட்டல் 1ஆம் இடம்<br>பண்ணிசை 2ஆம் இடம்<br>பேச்சு (நவராத்திரி) 3ஆம் இடம் |
| 25. செல்வி வா. வினோதா | ஆண்டு 8<br>மாலை கட்டல் 3ஆம் இடம்<br>பேச்சு (நவராத்திரி விழா) 3ஆம் இடம் |
| 26. செல்வி வி. யலஜா | ஆண்டு 9<br>பாடசாலைப்பரிசளிப்பு விழாவில்<br>ஆங்கிலத்திலும் சமயத்திலும் அதிகூடிய புள்ளி<br>பெற்று பரிசு பெற்றுள்ளார்.<br>பேச்சு (நவராத்திரி விழா) 1ஆம் இடம்<br>மாலை கட்டல் (கோட்டம்) 1ஆம் இடம்<br>பேச்சு (சேர். பொன். இராமநாதன்) 2ஆம் இடம்<br>~~கட்டுரை (சேர். பொன். இராமநாதன்) 2ஆம் இடம்~~<br>பண்ணிசை 3ஆம் இடம்<br>சைவபரிபாலனப்பரீட்சை "A"<br>ஆங்கிலக் குழுப்பாடல் (கோட்டம்) 2ஆம்இடம்<br>கற்பக விநாயகர் மாலைகட்டல் "B" சித்தி |
| 27. செல்வி சி. தர்சினி | ஆண்டு 9<br>கட்டுரை (சிறுவர் தினம்) 2ஆம் இடம்<br>கட்டுரை (சேர். பொன். இராமநாதன்)3ஆம் இடம்<br>மாலை கட்டல் 3ஆம் இடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 28. செல்வி நா. சர்வலோஜினி | ஆண்டு 9<br>பேச்சு (சிறுவர் தினம்) 2ஆம் இடம்<br>மாலை கட்டல் 3ஆம் இடம் |
| 29. செல்வி இ. ஜானகி | ஆண்டு 9<br>மாலை கட்டல் 2ஆம் இடம்<br>பண்ணிசை 2ஆம் இடம் |
| 30. செல்வி த. சிந்துஜா | ஆண்டு 9<br>சைவபரிபாலன சபை "B" |
| 31. செல்வி த. தர்சிகா | ஆண்டு 9<br>சைவபரிபாலன சபை "B" |
| 32. செல்வி அ. ஜெயந்தி | ஆண்டு 9 |
| 33. செல்வி யே. மேரிதர்சினி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B"<br>பண்ணிசை 2ஆம் இடம்<br>கோலம் போடுதல் 2ஆம் இடம்<br>குழுப்பாடல் (கோட்டம்) 1ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 34. செல்வி நா. சிவமாலினி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B"<br>தானியக் கோலம் 1ஆம் இடம் |
| 35. செல்வி உ. உதயவாணி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B"<br>பேச்சு (நவராத்திரி விழா) 3ஆம் இடம்<br>குழுப்பாடல் (கோட்டம்) 1ஆம் இடம் |
| 36. செல்வி ஜெ. அமிலா | ஆண்டு 10<br>குழுப்பாடல் (கோட்டம்) 1ஆம் இடம் |
| 37. செல்வி யோ. புஸ்பவதனி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B"<br>குழுப்பாடல் (கோட்டம்) 1ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 38. செல்வி.வி. றதிவதனி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B"<br>குழுப்பாடல் (கோட்டம்) 1ஆம் இடம் |
| 39. செல்வி செ. தமிழ்விழி | ஆண்டு 10<br>சைவபரிபாலன சபை "B" |
| 40. செல்வி து. துஸ்யந்தினி | ஆண்டு 11<br>சைவபரிபாலன சபை "B"<br>சகலகலாவல்லி மாலை மனனம் 1ஆம் இடம்<br>பண்ணிசை (தொண்டுபடுசெயன்முறை) 1ஆம் இடம்<br>பண்ணிசை (நவராத்திரி) 1ஆம் இடம்<br>பரராசப்பிள்ளையார் கோயிலினால்<br>நடாத்தப்பட்ட பண்ணிசைப்போட்டியில் 2ஆம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | இடத்தைப் பெற்றுள்ளார்.<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம்<br>குழுப்பாடல் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 41. செல்வி இ. சிவப்பிரியா | ஆண்டு 11<br>சைவபரிபாலன சபை "A"<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம்<br>குழுப்பாடல் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 42. செல்வி செ. ஜெனித்தா | தேங்காய்ப்பூக் கோலம் 1ஆம் இடம் |
| 43. செல்வி பா. பாலரஞ்சினி | ஆங்கிலப்பாடல் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 44. செல்வி இ. விஜித்தா | ஆண்டு 11 |
| 45. செல்வி கு. பத்மலோஜினி | ஆண்டு 12 O/L சித்தி B, 3C, 4S.<br>புள்ளிக்கோலம் 1ஆம் இடம்<br>பாஓதல் 3ஆம் இடம்<br>ஆங்கிலப்பாடல் (கோட்டம்) 2ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம்<br>மாணவர் தலைவர் |
| 46. செல்வி இ. கோகிலா | ஆண்டு 12<br>சேர். பொன். இராமநாதன் பேச்சுப்போட்டி<br>மேற்பிரிவு 1ஆம் இடம் தங்கப்பதக்கம்<br>கட்டுரை (சேர். பொன். இராமநாதன்) 3ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 47. செல்வி அ. துஸ்யந்தினி | O/L சித்தி A, 2C, 3S<br>கட்டுரை (சேர். பொன். இராமநாதன்) 1ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம் |
| 48. செல்வி ம. சுமித்திரா | ஆண்டு 13 மாணவர் தலைவர்<br>பொதுத்திறன் 1,தமிழ்,நாடகமும் அரங்கியலும்-1<br>சேர். பொன்.இராமநாதன் கல்லூரிப் பரிசளிப்பு<br>விழாவில்அதிகூடிய புள்ளி பெற்று பரிசு பெற்றமை.<br>தமிழ்ப்பாடத்தில் விஷேட சித்தி<br>பேச்சு (சேர். பொன். இராமநாதன்) ஆம் இடம்<br>இசை நாடகம் (கோட்டம்) 2ஆம் இடம்<br>தமிழ் மன்றத் தலைவர் |
| 49. செல்வி பு. ரஞ்சிதா | ஆண்டு 13 மாணவர் தலைவர்<br>கட்டுரை (சேர். பொன். இராமநாதன்) 2ஆம் இடம்<br>சடநாகம் (நாகசடம்) 3ஆம் இடம் |
| 50. செல்வி நா. கிருபாலினி | ஆண்டு 13<br>சடநாகம் (நாகசடம்) 2ஆம் இடம்<br>இந்துமாமன்றப் பொருளாளர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 51. | செல்வி பா. சுபாஜினி | A/L சித்தி 2B, C<br>கற்பகவிநாயகர் மாலை கட்டல் "B" சித்தி<br>சைவபரிபாலன சபை "C" |
| 52. | செல்வி நா. சத்தியா | G. C. E. A/L சித்தி C, 2S |
| 53. | செல்வி ஸ்ரீ. கலைவதனி | யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் 2ஆம் வருடம் |
| 54. | செல்வி மு. கலாநிதி | யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் 2ஆம் வருடம் |
| 55. | செல்வி கே. புஸ்பலட்சுமி | யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் 2ஆம் வருடம் |
| 56. | செல்வி ரெ. கிருஸ்ணவேணி | அறநெறிப்பாடசாலை ஆசிரியர் |
| 57. | செல்வி ஸ்ரீ. கலைச்செல்வி | |
| 58. | செல்வி செ. நாகராணி | அச்சகப்பணி |
| 59. | செல்வி S. பூமலர் | |
| 60. | செல்வி த. மஞ்சுளா | அலுவலகப்பணி |
| 61. | செல்வி சு. சுகந்தினி | |

சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்

1. செல்வி கா. கந்தையா
2. செல்வி செ. பெரியதம்பி
3. சகோதரி ஜதீஸ்வரி
4. திருமதி து. தவமலர்
5. செல்வி S. மீனா
6. செல்வி அ. கருணாதேவி
7. செல்வி த. மங்கையர்க்கரசி
8. திருமதி சி. தேவி
9. திருமதி வே. சுந்தரம்

10 திருமதி இ. பரமானந்தம்

11. செல்வி க. இராஜலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லப் பணியாளர் விபரம்

| | |
|---|---|
| திரு. கா. சிவபாலன் | - பிரதம லிகிதர் |
| செல்வி த. மஞ்சுளா | - உதவி லிகிதர் |
| செல்வி ச. ரேவதி | - உதவி லிகிதர் |
| திருமதி சி. தவனேஸ்வரி | - உதவி லிகிதர் |
| செல்வி க. காமாட்சி | |
| செல்வி செ. நாகராணி | |
| செல்வி எஸ். மீனா | |
| செல்வி . சு. சுகந்தினி | |
| திருமதி சி. தேவி | |

வங்கிகள்:

1. இலங்கை வங்கி, சுன்னாகம் க/இ - 4923
2. இலங்கை வர்த்தக வங்கி க/இ - 1060012977
3. இலங்கை வங்கி பம்பலப்பிட்டி க/இ - 0037 - 01 - 0004020 - 4

பட்டயக்கணக்காய்வாளர்:

செல்வேந்திரா அன். கோ. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக்கீதம்

பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று - வாழிய

அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லி யூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் - வாழிய

ஒழுக்கம் உயர்பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்ற மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற - வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக் கூடக்கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டு மிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும் - வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க - வாழிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org